# மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்

පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, උතුරු පළාත

PROVINCIAL DEPARTMENT OF EDUCATION, NORTHERN PROVINCE

Fax :-021-224 1383
email :- npdeplan@gmail.com

செம்மணி வீதி, நல்லூர்
චෙම්මණි පාර, නල්ලූර්
Chemmani Road. Nallur

Web:-www.edudept.np.gov.lk


எனது இல.
මගේ අංකය
My No } NP/20/ET/F/2/Annu.Tra/2025

உமது இல.
ඔබේ අංකය
Your No }

Date 2024.07.10

சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,

வடக்கு மாகாணம்.

**ஆசிரியர் சேவையில் வருடாந்த இடமாற்றம் - 2025**

மேற்குறித்த விடயமாக,

தங்கள் வலயத்தின் கீழுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் இலங்கை ஆசிரியர் சேவை சேவையின் 2025 ஆம் ஆண்டிற்கான வலயங்களுக்கிடையிலான வருடாந்த இடமாற்ற விண்ணப்பங்கள் EMIS தரவுத் தளத்தில் கோரப்பட்டுள்ளது. இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்களை நிகழ்நிலையினூடாக விண்ணப்பிக்க வழிப்படுத்துமாறும், இதன் வன்பிரதிகளைப் பெற்று அதனுடன் தொடர்புடைய ஆவணங்களை, பெயர் விபரத்துடன் தொகுத்து வன்பிரதி, மென்பிரதிகளை 2024.08.15 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

க.ஜெ. பிறட்லி
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
வடக்கு மாகாணம்

மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மாகாணக் கல்வித் திணைக்களம்
வட மாகாணம்


021-224 2800/ 0778759625- PDE
021-224 2801- APDE Admin
021-224 2803- APDE Dev
021-224 2802- APDE Gen Admin
021-224 2804- Chief Accountant

email :- educationnorthern@yahoo.com - Admin
npdeplan@gmail.com- Planning
npedufin@gmail.com - Finance
emisnp@gmail.com -EMIS
npdemgt@gmail.com

021-224 2805 - AO
021-224 2808 - Planning
021-224 2806 - General
021-224 2810 – EMIS
021-224 2807 – Education Admin

# மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, උතුරු පළාත
PROVINCIAL DEPARTMENT OF EDUCATION, NORTHERN PROVINCE

செம்மணி வீதி, நல்லூர்
චෙම්මනි පාර, නල්ලූර්
Chemmani Road, Nallur

Fax :-021-224 1383
email :- npdeplan@gmail.com
Web:-www.edudept.np.gov.lk /


எனது இல. / මගේ අංකය / My No } NP/20/ET/F/2/Annu.Tra/2024 உமது இல. / ඔබේ අංකය / Your No } Date: 10.07.2024

சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,

வடக்கு மாகாணம்.

## ஆசிரியர் சேவையில் வருடாந்த இடமாற்றம் - 2025

இலங்கை ஆசிரியர் சேவையின் 2025 ஆம் ஆண்டிற்கான இடமாற்ற விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 2025 ஆம் ஆண்டுக்கான இடமாற்றங்களை நடைமுறைப்படுத்தும்போது பின்பற்றவேண்டிய ஒழுங்குமுறைகளைத் தங்கள் கவனத்திற்கு தருகின்றேன்.

**1. இவ்விடமாற்றங்கள் பின்வரும் நிலைகளில் வடமாகாணசபை நிர்வாகப் பரப்பினுள் மேற்கொள்ளப்படும்.**

1) வலயத்திற்குள்ளான இடமாற்றங்கள்
2) வலயங்களுக்கிடையிலான இடமாற்றங்கள்
3) மாகாணங்களுக்கிடையிலான இடமாற்றங்கள்

**2. இடமாற்ற விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய திகதிகள்**

- சகல விண்ணபங்களும் வலயக் கல்வி அலுவலகங்களைச் சேரவேண்டிய இறுதித் திகதி → **2024.07.31**
- இவ்விண்ணப்பங்கள் மற்றும் மேன்முறையீடுகள் வலய இடமாற்றச்சபையினால் தீர்மானிக்கப்பட்டு, அவற்றுள் சிபார்சு செய்யப்பட்டவற்றை மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்ப வேண்டிய இறுதித் திகதி → **2024.08.15**
- விண்ணப்ப முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் இடமாற்ற விண்ணப்பங்கள் யாவும் வலயக் கல்வி அலுவலகத்திலேயே நிராகரிக்கப்படல் வேண்டும்.

**3. இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கத் தகைமையுள்ளோர்**

1. நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைச் சேவைக்காலத்தினை நியமனம் பெற்ற வலயத்தில் பூர்த்தி செய்தவர்கள் விண்ணப்பிப்பதற்கான தகைமை பெறுகின்றனர்.
2. சேவையின் தேவை கருதி இடமாற்றம் வழங்கப்பட்டு சேவைக்காலத்தினை பூர்த்தி செய்தவர்கள்
3. மருத்துவ காரணங்களின் அடிப்படையிலான இடமாற்றம் கோருவோர், அரச மருத்துவ நிபுணரின் வைத்திய அத்தாட்சிப் பத்திரம் மற்றும் நோய் நிர்ணய அட்டை ஆகியவற்றுடன் விண்ணப்பித்தல் வேண்டும். குறித்த மருத்துவ காரணத்தின் அடிப்படையிலான இடமாற்றம் வழங்குவது தொடர்பில் இடமாற்றச்சபையின் தீர்மானத்துக்கமைவாக அல்லது அரசாங்க மருத்துவ சபையின் பரிந்துரையின் அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.


021-224 2800- PDE
021-224 2801- APDE Admin
021-224 2802- APDE Dev
021-224 2803- APDE Gen Admin
021-224 2804- Chief Accountant

email :- educationnorthern@yahoo.com - Admin
npdeplan@gmail.com- Planning
npedufin@gmail.com - Finance
emisnp@gmail.com–EMIS
npdemgt@gmail.com- Management

021-224 2805- AO
021-224 2806 - Planning
021-224 2807/8/9 - General
021-224 2810 - EMIS

4. தமது சொந்த நலனுக்காக விசேட காரணங்களின் அடிப்படையில் நிபந்தனை அடிப்படையிலான நியமனம் பெற்றவர்கள் தொடர்பில், அவர்களது நியமன நிபந்தனைச் சேவைக்காலத்துடன் நிபந்தனை இடமாற்றம் பெற்றதன் காரணமாக கடமையாற்ற வேண்டிய **மேலதிக சேவைக் காலத்தினையும் சேர்த்துப் பூர்த்தி செய்த பின்னரே விண்ணப்பிப்பதற்கான தகைமை பெறுகின்றனர்.**

5. வாழ்க்கைத்துணையின் எஞ்சிய சேவைக்காலத்துக்காக கடமையாற்றுபவர்கள் தொடர்பில் அவர்களது நியமன நிபந்தனைச் சேவைக்காலத்துடன் வாழ்க்கைத்துணையின் எஞ்சிய சேவைக்காலத்தினையும் சேர்த்துப் பூர்த்தி செய்த பின்னரே விண்ணப்பிப்பதற்கான தகைமை பெறுகின்றனர்.

6. சம்பளத்துடனான கற்கை விடுமுறை பெற்றவர்கள் அக்காலப்பகுதியினை நிரந்தர வலயத்தில் பூர்த்தி செய்த பின்னரே விண்ணப்பிப்பதற்கான தகைமை பெறுகின்றனர்.

**நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைச் சேவைக்காலத்தை நிறைவு செய்தோர் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளபோதிலும்,** வடமாகாணத்தின் ஆசிரியர் எண்ணிக்கை மற்றும் ஆசிரியர் பரம்பலின் அடிப்படையில், இடமாற்றச் சபையானது பூர்த்தி செய்திருக்க வேண்டிய காலம் தொடர்பான தீர்மானத்தினை மேற்கொள்ளும்.

**அத்துடன் இடமாற்றம் கோரும் வலயத்தில் குறித்த பாடத்திற்கு உள்ள வெற்றிடம், கடமையாற்றும் வலயத்தினது ஆசிரியர் தேவை என்பனவற்றின் அடிப்படையிலேயே இடமாற்றம் வழங்குவதற்குப் பரிசீலிக்கப்படும். அத்துடன் தேசிய இடமாற்றக் கொள்கை மற்றும் வட மாகாண இடமாற்றக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களும் இடமாற்ற நடைமுறையின்போது கவனத்திற் கொள்ளப்படும்.**

**சேவைக் காலத்தினைக் கணிப்பிடுதல்**

பின்வரும் சேவைக் காலங்கள் நியமனக் கடிதத்திற் குறிப்பிடப்பட்டுள்ள கட்டாய சேவைக் காலத்துடன் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.

1) **ஆசிரியரின் பயிற்சி மற்றும் கற்கை விடுமுறைக் காலங்கள்**
2) **அக்காலப்பகுதியில் சொந்த மாவட்டத்தில் கடமையாற்றிய தற்காலிக இணைப்புக் காலம்**
3) **சொந்த மாவட்டத்தில் கடமையாற்றிய நிபந்தனை அடிப்படையிலான இடமாற்றக் காலம்∴ தற்காலிக இணைப்புக் காலம்**

**3.1 மாகாண இடமாற்றம்**

வடக்கு மாகாணத்துக்கு வெளியே இடமாற்றம் கோருவோர் தொடர்பில், மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் அறிவுறுத்தலுக்கமைவாக தகுதி பெற்றோர் விடுவிக்கப்படுவார்கள்.

இடமாற்றங்கள் யாவும் 2025.01.01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதால், ஆசிரியர்களின் சேவைக்காலம் 2024.12.31 ஆந் திகதி வரை கணிப்பிடப்படல் வேண்டும்.

**4. இடமாற்ற விண்ணப்பமும் ஏனைய நடைமுறைகளும்**

1) விண்ணப்பங்கள் யாவும் முறையான விண்ணப்பப் படிவத்தில் மூன்று பிரதிகளில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பம் முழுமையாகப் பூரணப்பட்டிருப்பதோடு காரணங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். இடமாற்றத்தின்போது **பாடசாலைகள் வழங்குவது தொடர்பாகத் தீர்மானிப்பதற்கு ஆசிரியர்களது செயற்சாதனை அறிக்கை** (பாடசாலைக்குப் பெற்றுக் கொடுத்த இணைப்பாட விதானச் செயற்பாடுகள், கற்பித்தலில் தொடர்புபட்ட சித்திவீதம் என்பன) அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு இணைக்கப்படல் வேண்டும். (மாதிரி இணைக்கப்பட்டுள்ளது)

1) **விண்ணப்பங்கள் யாவும் சுயவிபரக் கோவையுடன் ஒப்பு நோக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பத்தில் ஆசிரியரால் குறிப்பிடப்பட்டுள்ள சேவைக்கால விபரத்தில், விசேட**

விடுமுறைக் காலம், தற்காலிக இணைப்புக் காலம், நிபந்தனை இடமாற்றக் காலம் (ஏ9 பாதை தடைப்பட்டகாலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டவை) கற்கை விடுமுறைக் காலம் என்பன சரிபார்க்கப்படல் வேண்டும்.

2) சரியான சேவைக்காலம் குறிப்பிடப்பட்டு அதன் கீழ் குறித்த அலுவலரின் பெயர் மற்றும் ஒப்பமிடுவதன் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

3) யாழ்ப்பாண மாவட்டத்துக்கு இடமாற்றம் கோருவோர் தொடர்பில் அவர்கள் இடமாற்றம் கோரும் வலயத்தில் வெற்றிடமில்லாதவிடத்து வெற்றிடமுள்ள இன்னொரு வலயம் கவனத்திற் கொள்ளப்படும். எனவே யாழ் மாவட்டத்திற்கு இடமாற்றம் கோருவோர் தமது விருப்பத் தெரிவாக குறைந்தது மூன்று கல்வி வலயங்களைத் தெரிவு செய்தல் வேண்டும். இடமாற்றம் கோரும் வலயத்தில் குறித்த பாட வகுதிக்கு வெற்றிடம் இருப்பின் மட்டுமே குறித்த வலயத்துக்குட்பட்ட பாடசாலைக்கு இடமாற்றம் வழங்கப்படும்.

4) இடமாற்ற விண்ணப்பத்துடன் முதல் நியமனக் கடிதப்பிரதி மற்றும் நிபந்தனை அடிப்படையிலான இடமாற்றம்/ தற்காலிக இணைப்பு பெற்றிருப்பின் அதன் பிரதிகள், செயற்சாதனை அறிக்கை, ஒழுக்காற்று நடவடிக்கை, ஐயவினா இருப்பின் அதன் பிரதி ஆகியன கட்டாயம் இணைக்கப்படல் வேண்டும்.

5) விண்ணப்பங்கள் யாவும் குறித்த நிரல்முறைகளினூடாக ஆசிரியர்களால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். (அதிபர் - கோ.க.ப. – வ.க.ப. - மா.க.ப)

6) விண்ணப்பங்கள் யாவும் கிடைக்கும் தினத்திலேயே திகதி முத்திரை இடப்பட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

7) ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பங்கள், இடமாற்றக் கட்டளைகள் என்பன சுயவிபரக்கோவையில் பத்திரப்படுத்தப்படல் வேண்டும்.

8) இடமாற்ற விண்ணப்பப்படிவத்தில் வலயக் கல்விப் பணிப்பாளரின் அவதானிப்பு கட்டாயமாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

9) வலய இடமாற்றச்சபையால் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பான கடிதம் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் மேன்முறையீடுகள் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித்திகதி குறிப்பிடப்படல் வேண்டும்.

10) இடமாற்றச்சபைகளை அமைப்பதற்கான அங்கீகாரத்தை முன்னரே பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**வலய இடமாற்றச்சபை அங்கத்தவர்கள்**

**வலய இடமாற்றச்சபையானது பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கியதாக அமைக்கப்படல் வேண்டும்.**

தாபன மறும் நிர்வாகத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்

திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர்,

கோட்டக்கல்வி அலுவலர்கள்

நிர்வாக உத்தியோகத்தர்

இடமாற்றச்சபையில் அங்கம் வகிப்பதற்குத் தகமையுடைய ஒவ்வொரு தொழிற்சங்கம் சார்பிலான ஒரு பிரதிநிதி

- இடமாற்றச்சபைக்கு உரிய அனுமதி பெறப்படாமலும்
- இடமாற்றச் சபையின் சிபார்சு இல்லாமலும்
- இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கமைவான விண்ணப்பப் படிவத்தில் அனுப்பப்படாத விண்ணப்பங்களும்
- சுயவிபரக்கோவையுடன் ஒப்பிட்டு உறுதிப்படுத்தப்படாமல் அனுப்பப்படும் விண்ணப்பங்களும்
- விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய இறுதித் திகதியான 2024.08.15 ஆந் திகதிக்குப் பின்னர் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்களும்

- **விண்ணப்படிவத்தின் இரண்டு பிரதிகள்** மற்றும் **இணைக்கப்பட** வேண்டிய ஆவணங்கள் (முதல் நியமனக் கடிதப்பிரதி மற்றும் தேவையானவை ) இல்லாதனுப்பப்படும் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**மேற்குறித்த காரணங்களினால் இடமாற்றம் நிராகரிக்கப்படின் அதற்கு தாங்களே பொறுப்பாளியாவீர்கள் என்பதனையும் தங்கள் கவனத்திற்கு அறியத் தருகின்றேன்.**

**2) இடமாற்ற மேன்முறையீடுகள்**

இடமாற்றம் தொடர்பாக ஆசிரியர்களினால் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள், உரிய இடமாற்றச் சபையின் மேன்முறையீட்டுச் சபை மூலமே பரிசீலிக்கப்படுதல் வேண்டும்.

உரிய இடமாற்றச் சபையின் மேன்முறையீட்டுச் சபையில் பரிசீலிக்கப்பட்ட மேன்முறையீடுகள் மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்ப வேண்டிய இறுதித் திகதி

——————→ **2024.08.15**

மேற்குறித்த தகவல்களை தங்கள் வலய, கோட்டக் கல்வி அலுவலகங்களில் காட்சிப்படுத்துவதுடன், சகல பாடசாலை அதிபர்கள் மூலம் சகல ஆசிரியர்களுக்கும் தெரியப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கோள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

க. ஜெ. பிறட்லி
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்

மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மாகாணக் கல்வித் திணைக்களம்
வட மாகாணம்

பிரதிகள்:

1. செயலாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம் } தகவலுக்காக
2. பொதுச் செயலாளர், ……………………………………………….